பிராந்திய ஆவணப்படுத்தல் - அம்பாறை

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | பிராந்திய ஆவணப்படுத்தல் - அம்பாறை |
| செயற்றிட்ட எண் | NF/PG/2024/0003 |
| செயற்றிட்ட இடம் | அம்பாறை ,இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2024 ஜனவரி -2024 டிசம்பர் |
| அறிக்கையிடல் காலம் | 2024 ஜனவரி -2024 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | டொரன்டோ பல்கலைக்கழகம் |
| முக்கிய பங்குதாரர்கள் | ஆவண நன்கொடையாளர்கள், எழுத்தாளர்கள் , |
| பாதீடு **(Budget)** | 604,263 ரூபா |

செயற்றிட்ட அறிமுகம்

அம்பாறை மாவட்டத்தின் வரலாறு, அங்கு வாழும் மக்களின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், விவசாயம் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், பன்மைத்துவம், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தளங்கள், பெண்கள் அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், அந்த மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும் பண்டைய வரலாற்றினையும், அந்தந்தப் பிராந்தியங்களின் அரசியற் தனித்தன்மைகளையும், இம்மாவட்டங்கள் இலங்கையின் வேறு இராசதானிகளுடன் கொண்டிருந்த உறவுகளையும் ஆவணப்படுத்துவதே இச்செயற்றிட்டமாகும்.

இலக்குகள்

- அம்பாறை மாவட்டம் மற்றும் அங்கு வாழும் மக்களது வரலாற்றினை ஆவணப்படுத்தும் இந்த முயற்சியானது அதனுடைய கால மற்றும் இடரீதியான தன்மைகளின் அடிப்படையில் பரந்துபட்டது. இந்த முயற்சிகளை ஒரு செயற்திட்டத்தின் மூலமாக நிறைவு செய்ய முடியாது. இந்த முதலாவது செயற்றிட்டம் இம் மாவட்டங்களினைச் சேர்ந்த

கிராமங்களையும் அங்கு வாழ்ந்த மற்றும் தற்போது வாழுகின்ற மக்களினை ஆவணப்படுத்துவதனையும் பிரதான இலக்காக கொண்டுள்ளது.

நோக்கம்

- இச்செயற்றிட்டத்தின் கீழ் 600 ஆவணங்கள் 60 ஆளுமைக்குறிப்புகள், 48 நிறுவனக்குறிப்புகள், 120 புகைப்படங்கள் , 240 குறுங்கால ஆவணங்கள் மற்றும் பிராந்தியம் சார் நிகழ்வுகளை ஆவணப்படுத்தல்.

செயற்றிட்ட அடைவுகள்

| அடைவுகள் | அடைவுமட்டம் |
|---|---|
| ஆவணங்கள் | 725 |
| வாய்மொழி வரலாறுகள் | 40 |
| புகைப்படங்கள் | 165 |
| குறுங்கால ஆவணகம் | 260 |
| ஆளுமைக் குறிப்புகள் | 15 |
| நிறுவனக்குறிப்புகள் | 54 |
| நிகழ்வுகளை பதிவிடல் | 19 |
| பன்முகத்தன்மையடிப்படையிலான ஆவணங்கள் | 128 |

செயற்திட்டம் சார்ந்த ஏனைய அடைவுகள்

- அம்பாறை சார்ந்த கல்முனை பொது நூலகம், மருதமுனை பொது நூலகம், பாண்டிருப்பு பொது நூலகம், சம்மாந்துறை பொது நூலகம் போன்றன நிறுவனங்கள் உடன் இணைந்து ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் இடம்பெற்றன.

- அம்பாறை மாவட்ட செயற்திட்டத்தினை மேலும் இணைந்து செயல்படுத்துவதற்காக லைக்கா நிறுவனம், PCA (Peace and community action), GOGM, Center for peace studies, GAFSO, Jolly Kings போன்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டது.

- பழங்குடியினர் ஆவணப்படுத்தல் சம்மந்தமாக அலிகம்பை பிரதேச ஆய்வுகள் மற்றும் ஆவணப்படுத்தல் செய்யப்பட்டது.

- அம்பாறை பிரதேசம் சார்ந்து வெளிவந்த அவரி, தூது, வெண்ணிலா, கீறல், விருந்து போன்ற சஞ்சிகைகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தல் செய்யப்பட்டது. அதே போன்று அருணன், நவயுகம், தலைவன் போன்ற 1990 ஆண்டுகளுக்கு முன்னதான சஞ்சிகைககள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றும் அதனை ஆவணப்படுத்த முடியவில்லை.

- அம்பாறை பிரதேசத்தின் 32 எழுதாளர்களிடமிருந்து ஆவண அனுமதி பெறப்பட்டது.

- அம்பாறை மாவட்ட அரிய தகவல்களாக வீரமுனை சோழர் கால கல்வெட்டுகள், காரைதீவு நாகர் கால கல்வெட்டுகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது. அத்தோடு உகந்தை, பாணமை, திருக்கோவில், அம்பாறை போன்ற இடத்தில் உள்ள கல்வெட்டுகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

- இச்செயற்றிட்டத்தின் கீழ் முஸ்லிம் குரல் பத்திரிகையானது முழுமையாக பெறப்பட்டு எண்ணிமப்படுத்தி இலவச அணுக்கத்திற்காக விடப்பட்டுள்ளது.

  முஸ்லிம் குரல் (பத்திரிகை)

- நாகமணி விநாயகமூர்த்தி எனும் எழுத்தாளரது 25 ஆவணங்கள் அனுமதி பெறப்பட்டு எண்ணிமப்படுத்தி திறந்த அணுக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

  நாகமணி விநாயகமூர்த்தி

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- செயற்றிட்த்திற்கான தொடர்சியான நிதியினை பெற்றுக்கொள்வதில் உள்ள சவால்கள் - அம்பாறை பிராந்தியத்தில் காணப்படும் ஆளுமைகள் மற்றும் செயற்றிட்ட வள நன்கொடையாளர்களை தொடர்பு கொண்டு கலந்துரையாடல்.
- ஆய்வினை அடிப்படைக் கண்ணோட்டத்தில் செயற்றிட்டத்தினை முன்னெடுத்துச் செல்லக்கூடிய கள ஆய்வாளரை இனங்காணல்.

பின்னிணைப்பு

பிராந்திய ஆவணப்படுத்தல் -அம்பாறை